Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 004 | சனிக்கிழமை Saturday | 04.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த அரசு தான் பாஜக

பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

அதிமுக ஆட்சியில் பழனிசாமி செய்த சாதனைகளை அவரால் கூற முடியுமா? என கோவையில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

கோவை மாவட்டத்தில் போட்டியிடும் திமுக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் ஸ்டாலின், கோவை கொடிசியா மைதானத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். பிரச்சார மேடைக்கு வருவதற்கு முன்னர், சின்னயம்பாளையத்திலிருந்து பிரச்சார மேடை வரை திறந்தவேனில் நின்றவாறு முதல்வர் ஸ்டாலின் 'ரோடு ஷோ' நடத்தினார்.

அதைத்தொடர்ந்து ஸ்டாலின் பேசியதாவது: நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2024 மக்களவைத் தேர்தலில் திமுகவுக்கு மாபெரும் வெற்றியை கோவை மக்கள் தந்தீர்கள். அது 2026 தேர்தலிலும் முழு வெற்றியாக தொடர வேண்டும்.2021 தேர்தலில் கொடுத்தவாக்குறுதிகள் மட்டுமின்றி, கொடுக்காத பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டு உங்கள் முன்பு வந்துள்ளேன். இவ்வாறு நான் கூறியதை போல், அதிமுக ஆட்சியில் பழனிசாமி செய்த சாதனைகளை அவரால் கூற முடியுமா? மகளிர்உரிமைத்தொகை திட்டம்,விடியல் பயணம் என பழனிசாமி நம் திட்டங்களை ஒன்று விடாமல் காப்பி அடித்து அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பல்வேறு இனம், மொழி, மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் அமைதியாக, நிம்மதியாக வாழ்கின்றனர். வந்தாரை வாழவைக்கும் நம்மைப் பார்த்து அபாண்டமாக பழி போட்டவர் பிரதமர் மோடி. குடியரசு தின விழாவில் நம் அலங்கார ஊர்திக்கு இடமில்லை என மறுத்தனர். இதனால் தான் தமிழ்நாட்டில் உங்களுக்கு இடம் இல்லை என மக்கள் கூறுகின்றனர். தமிழ்நாட்டின் மீது வெறுப்பு ஊறிப்போய் உள்ள குணம் அவர்களுக்கு.

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த அரசு தான் பாஜகஅரசு.20லட்சம் மக்கள் தொகை இல்லை என காரணம் தெரிவிக்கின்றனர். கோவை, மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டத்துக்கு அனுமதி மறுக்க வேண்டிய அவசியம் என்ன?.அந்த 2 நகரங்களும் தமிழ்நாட்டில் இருப்பது தான் காரணம். தமிழ்நாட்டை பார்த்தால் பாஜகவுக்கு எப்படித் தெரிகிறது. பாஜகவுக்கு வாக்களிக்காதது என்ன பாவச் செயலா?

மத்திய பட்ஜெட் தயாரிக்கும் போது, இயற்கை பேரிடருக்கு நிவாரண நிதி தரும் போது தமிழ்நாட்டை பாஜக மறந்துவிடும். தேர்தல் வந்தால் இவர்களுக்கு தமிழ்நாடு நினைவுக்கு வரும். இப்படியெல்லாம் நீங்கள் தமிழ்நாட்டை பழிவாங்குவதால்தான், எங்கள் மக்களுக்கும் வாக்குச்சாவடிக்கு செல்லும் போது பாஜகநினைவுக்கு வராது. இனியும் வரக்கூடாது. நீங்கள் என்ன திட்டம் போட்டு எங்கள் வளர்ச்சியை தடுத்தாலும், எங்கள் மக்களுக்கான திட்டத்தை நான் தொடர்ந்து கொடுப்போம். திராவிட மாடல் சாதனைகளை நாங்கள் தொடர்ந்து வெற்றியாக படைத்துக் கொண்டே இருப்போம்.

இதன் தொடர்ச்சியாக அடுத்த 5 ஆண்டுகளி'ல் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் என்னெ'ன செய்யப்போகிறோம் என தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளோம். இந்த தேர்தலில் திமுக தேர்தல் அறிக்கை தான் சூப்பர் ஸ்டார். நாங்கள் சொன்னால், செய்வதை தான் சொல்வோம். கோவை மக்கள் இம்முறை 10–க்கு 10 வெற்றியை திமுகவுக்கு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு வழங்க வேண்டும். நீங்கள் வழங்கும் வாக்கு ஒரு கூட்டணிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வழங்கும் வாக்கு.

பொருளாதார வளர்ச்சி, ஆடைகள், காலணிகள்,மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் நம்பர் 1 என, இந்தியளவில் சாதித்துவிட்டு நாங்கள் வாக்கு கேட்க வந்துள்ளோம். ஆனால், கலவரம் செய்தால் ஜெயித்துவிடலாம் என நினைக்கும் கட்சிக்கு தமிழ்நாடு தக்கபதிலடி தந்தாக வேண்டும். நீங்கள் தருவீர்கள். தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்ற ஜனநாயக போரில் அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, தமிழ்நாட்டை காக்க கோவையில் உள்ள எல்லோரும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

வேட்பாளர்கள் கோவை தெற்கு – செந்தில்பாலாஜி, கோவை வடக்கு – துரை. செந்தமிழ்செல்வன், கிணத்துக்கடவு – கேவிகேசபரி கார்த்திகேயன், வால்பாறை – ஆர்.சுதாகர், சூலூர் – தளபதி முருகேசன் மற்றும் கூட்டணிக் கட்சிகளான பொள்ளாச்சி – நித்தியானந்தன் (கொமதேக), சிங்காநல்லூர் காங்கிரஸ் வேட்பாளர் ஆகியோரை அறிமுகப்படுத்தி முதல்வர் ஸ்டாலின் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

தமிழக பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு:

மயிலாப்பூரில் தமிழிசை, சாத்தூரில் நயினார் நாகேந்திரன் போட்டி

சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி,நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி(தனி)தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை. தமிழகத்தில் வரும் 23–ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுக தலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி – ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார்
2. மயிலாப்பூர் – தமிழிசை சவுந்தர்ராஜன்
3. தளி – நாகேஷ் குமார்
4. திருவண்ணாமலை – ஏழுமலை
5. ராசிபுரம் (தனி) – பிரேம்குமார்
6. மொடக்குறிச்சி – கிருத்திகா சிவகுமார்
7. உதகமண்டலம் – போஜராஜன்
8. அவிநாசி(தனி) – எல். முருகன்
9. திருப்பூர் தெற்கு – தங்கராஜ்
10. கோவை வடக்கு – வானதி சீனிவாசன்
11. திருவாரூர் – கோவி. சந்துரு
12. தஞ்சாவூர் – முருகானந்தம்
13. கந்தர்வக்கோட்டை (தனி) – உதயகுமார்
14. புதுக்கோட்டை – ராமச்சந்திரன்
15. அறந்தாங்கி – கவிதா ஸ்ரீகாந்த்
16. திருப்பத்தூர் – திருமாறன்
17. மானாமதுரை (தனி) – பால கணபதி
18. மதுரை தெற்கு – ராம ஸ்ரீநிவாசன்
19. சாத்தூர் – நயினார் நாகேந்திரன்
20. ராமநாதபுரம் – நாகேந்திரன்
21. திருச்செந்தூர் – ராதாகிருஷ்ணன்
22. வாசுதேவநல்லூர் (தனி) – ஆனந்தன் ஐயாசாமி
23. ராதாபுரம் – பாலகிருஷ்ணன்
24. நாகர்கோவில் – காந்தி
25. குளச்சல் – சிவக்குமார்
26. பத்மநாபபுரம் – ரமேஷ்
27. விளவங்கோடு – விஜயதரணி

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நாளில் தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க உத்தரவு

புதுடெல்லி: தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு தினத்தன்று தினக்கூலிகள், தற்காலிகப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள 'செய்திக்குறிப்பில், '1951ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 135பி–ன்படி எந்த ஒரு வணிகம், வர்த்தகம்,தொழில்துறை நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் அமைப்பில் பணிபுரிபவர்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும். இற்காக எந்த பிடித்தமும் செய்யப்படாது.

இந்த விதிகளை மீறும் எந்த ஒரு உரிமையாளரும் அபராதத்துக்கு உள்ளாவார்.

தங்கள் தொகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலை அல்லது வணிக நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வேலை செய்யும் வாக்காளர்கள், தேர்தல் நடைபெறும் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்திருந்தால், வாக்குப்பதிவு நாளன்று தங்களது வாக்குகளைச் செலுத்துவதற்கு ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு. தமிழ்நாடு, கேரளா,புதுச்சேரி,அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்குப் பொருந்தும். மேலும், 8 தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள கோவா, குஜராத், கர்நாடகா,மகாராஷ்டிரா,நாகாலாந்து, திரிபுரா ஆகிய ஆறு மாநிலங்களுக்கும் இது பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அசாம், கேரளா, ஏப்ரல் 9–ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. கோவா, கர்நாடகா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் இந்த தேதியில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் மற்றும் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் இடைத் தேர்தல் ஆகியவ ஏப்ரல் 23–ம் தேதி நடைபெற உள்ளது. மேற்கு வங்கத்தைப் பொருத்தவரை ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகியதேதிகளில்இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மே 4–ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை	கோவில் திருவிழா	அரசியல் நிகழ்வுகள்
கல்வி	திருமண நாள்	பிறந்த நாள்	ஆண்டு விழா
திறப்பு விழா	வீட்டு சுப நிகழ்ச்சிகள்	நினைவு நாள்
ரியல் எஸ்டேட்	பைனான்ஸ்	நகைக்கடன்
வேலை வாய்ப்பு	ஆட்டோமொபைல்	

தொடர்புக்கு : ☎ +919444082959

வட தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி உயர வாய்ப்பு

வட தமிழகம், புதுச்சேரியில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் 7–ம் தேதி வரை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மரத்வாடா முதல் தென் தமிழகம் வரை உள் கர்நாடகம் வழியாக 900 மீட்டர் உயரத்தில் ஒரு காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (ஏப்.4) ஒரிரு இடங்களிலும், 5, 6 தேதிகளில் ஒருசில இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

கோவை ஒப்பணக்காரவீதி பகுதியில், உள்ள சிந்தி சிஹார்பூர் பேங்கர்ஸ் அசோசியேஷன் திருக்கோவில் சார்பாக,

கோடை வெயில் காலத்தை முன்னிட்டு அனைத்து பொதுமக்களுக்கும் இலவச நீர் மோர் வழங்கும் சேவை துவங்கப்பட்டது

கோவை ஒப்பணக்காரவீதி பகுதியில், கடந்த 90 ஆண்டுகளாக சிந்தி சிஹார்பூர் பேங்கர்ஸ் அசோசியேஷன் எனும் திருக்கோவில் செயல்பட்டு வருகிறது. இந்த திருக்கோவில் சார்பாக சிந்திஸ் ஆப் கோவை எனும் பெயரில், கடந்த 5 ஆண்டுகளாக கோடை காலத்தில் அனைத்து பொதுமக்களுக்கும் இலவச நீர் மோர் வழங்கபட்டு வருகின்றது. இதன் 6வது ஆண்டு துவக்கவிழா நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதனை சிந்திஸ் ஆப் கோவை அமைப்பின் தலைவர்கள் தினேஷ் மைனானி, தீபக் உத்மானி, ஆகியோர் துவக்கி வைத்தனர்.. இதனை தொடர்ந்து இது குறித்து சிந்திஸ் ஆப் கோவை அமைப்பின் செயலாளர் கிரண் பஞ்சாபி, செய்தியாளர்களிடம் கூறியதாவது. கடந்த 5 ஆண்டுகளாக கோடை வெயிலை தனிக்கும் வகையில் அமைப்பின் சார்பாக, அனைத்து தரப்பு பொதுமக்களுக்கும் இலவச நீர்மோர் வழங்கி வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக இன்று நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி உள்ளதாகவும் தினமும் 1000 முதல் 1500 நபர்கள் வரை நீர்மோரை பருகி செல்வதாகவும், இந்த சேவையை தொடர்ந்து 60 நாட்கள் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த சேவை அளிக்க எங்களுக்கு உதவியாக இருந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சிந்திஸ் ஆப்கோவை அமைப்பின் நிர்வாகிகள், பிரேம் மைனானி, சுனில் டுக்ரேன், பகவான் தாஸ், ராகுல் மத்திஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி மலரும்

மதுராந்தகம் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் வாக்கு சேகரிப்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியத்தில் உள்ள திம்மாபுரம், திருமுக் காடு, விளாங்காடு, காட் டுகரணை, எலப்பாக்கம், ஆணைகுன்னம், மோகல்வாடி, ராமாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் திமுக உள்ளிட்ட மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளை நேற்று நேரில் சந்தித்து உதய சூரி யன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். அப்போது அவர்களிடம் வேட்பாளர் அமுலு பொன்மலர் பேசுகையில், கூப்பன், 1.5 லட்சம் பேருக்கு தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைந்தால் பெண்களுக்கு ரூ.2,000, இல்லத்தரசி என்ற புதிய திட்டத்தில் ரூ.8,000 வேலைவாய்ப்பு உள்ளிட்ட மகத்தான திட்டங்களை பெற முடியும். ஆகவே மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய. உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று பேசினார். இதில், ஒன்றிய செயலாளர் கோகுலக்கண்ணன், பேரூர் செயலாளர் எழிலரசன், மாவட்ட கவுன்சிலர் வசந்தா, மாலதி, நிர்வாகிகள் வெங்கடேசன், கருணாகரன் பார்த்தசாரதி, முகமது அலி, சீனிவாசன், ரகு, ரவீந்திரன், அறிவழகன், பொன்னிவளவன், கோவிந்தராஜ், தணிகைமலை, ஜெயக்குமார் சுதாகர் நேசமணி ,உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள், முன்னோடிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு சுயாட்சியாக போட்டியிடும் காட்டகரம் ஓம் சக்தி அம்மா கீதா பர்கூர் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனுவினை தாக்கல் செய்தார் பின்பு திறந்த வெளி காரில் தனது பிரச்சாரத்தை தொடங்கினா

சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டம் சேலம் மத்திய மாவட்ட செயலாளர் அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திமுக அரசின் 5 ஆண்டு கால சாதனை திட்டங்களை பட்டியலிட்டும், தேர்தல் அறிக்கையை துண்டு பிரசுரங்களாக விநியோகித்தும், தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு சங்ககிரி தொகுதி வேட்பாளர் மணிகண்டனை ஆதரித்து வெற்றி பெற செய்ய வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார்.

கடையநல்லூரில் தவெக வேட்பாளர் ஜலீல் வேட்புமனு தாக்கல் செய்தார்

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறவுள்ளசட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் (தவெக) சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜலீல் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.தமிழக வெற்றி கழகத்தின் மத்திய மாவட்ட செயலாளர் நியாஸ் தலைமையில் நகர பொறுப்பாளர் பாலமுருகன்மணவாளன் மருத்துவ அணி வாசுதேவி ஆகியோர் முன்னிலையில்கடையநல்லூர் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜேந்திரன் அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார் கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் உடன் இருந்தார்

இந்நிகழ்வில், தவெக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணித் தலைவர்கள் கலந்து கொண்டு ஜலீலுக்கு ஆதரவு தெரிவித்தனர். வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஆதரவாளர்கள் உற்சாகமாகக் குரல் கொடுத்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

மேலும், தேர்தலில் வெற்றி பெற்று மக்களுக்கு தேவையான அடிப்படை சேவைகள் செய்வேன் என்றும்சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டால் கடையநல்லூர் தொகுதியிலேயே தங்கி இருந்து மக்கள் பணியாற்றுவேன் என்று நம்பிக்கையுடன்வேட்பாளர் ஜலீல் தெரிவித்தார்.

கருவுற்ற தாய்மார்கள் ஆட்டிசம் விழிப்புணர்வு

தேவகோட்டை – சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் ஆட்டிசம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்வில் ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார்.தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக சிறப்பு பள்ளி ஆசிரியைகள் கவிதா மற்றும் செல்ல நாச்சியார் ஆகியோர் மாணவர்களிடம் பேசுகையில், ஆட்டிசம் குழந்தைகள் அனைவருக்கும் உதவி செய்யுங்கள். ஆட்டிசம் குழந்தைகளில் நடக்க முடியாத குழந்தைகளுக்கு நடக்க முடிந்த குழந்தைகள் உணவு, தண்ணீர் எல்லாம் கொண்டுபோய் கொடுப்பார்கள். அவர்கள் சாப்பிட உதவிசெய்த பிறகு இவர்கள் சாப்பிடுவார்கள்.ஆட்டிசம் என்றால்அறிவுவளர்ச்சி குறைபாடு தான். ஒரு நிகழ்ச்சி நடக்கிறது என்றால் மற்ற மாணவர்கள் மாதிரி ஒரு இடத்தில் அமர்ந்து கவனிக்க முடியாது. மற்ற மாணவர்கள் கேள்வி கேட்ட உடனே பதில் சொல்வார்கள். ஆனால்ஆட்டிசம்குழந்தைகள் கேட்ட அரை மணி நேரம் கழித்து தான் பதில் சொல்ல முடியும் .நம் முகத்தைப் பார்த்து பதில் சொல்ல முடியாது . ஆட்டிஸம் குழந்தை களில் பலவகையினர் உண்டு.ஆட்டிசம் குழந்தைகளுக்கு எல்லா திறமையும் இருக்காது. ஆனால் கண்டிப்பாக ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை இருக்கும். அந்த திறமையை கண்டுபிடித்து அதில் வெற்றி அடைய செய்வதே நோக்கம். ஆ ட் டி ஸ ம் குழந்தைகளுக்கு மற்ற மாணவர்களைப் போல் வெளி உலகம் தெரியாது. நாம் அழைத்துச் சென்றால் வருவார்கள். எங்கு வந்துள்ளோம், இது என்ன இடம் என்பதெல்லாம் தெரியாது. வெளி உலகம் தெரியாத அவர்களுக்கு தெரிந்தது எல்லாம் அவர்கள் படிக்கும் பள்ளி, அங்கு உள்ள ஆசிரியர்கள் மட்டுமே.

அவர்களை சமுதாயத்தோடு ஒன்றிப்போக செய்வதே அனைவரின் நோக்கமாகும். மற்ற குழந்தைகள் அவர்களை வெறுக்க கூடாது. விளையாட சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆட்டிசம் குழந்தைகளின் சிலபேர் அமைதியாக இருப்பார்கள். எழுத தெரியாது. அவர்களை நார்மல் பள்ளியில் படிக்க வைக்கலாம். சிறு வயதிலேயே ஆட்டிசம் குழந்தைகளை கண்டுபிடித்தால் சரி செய்யலாம். பொதுவாக நடக்கும் வயதில் குழந்தைகள் நடக்க வேண்டும் .இல்லையென்றால் மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும். ஆட்டிசம் குழந்தைகள் உருவாவதே ஊட்டச்சத்து குறைபாடுகளினால்தான். அந்தக் காலத்தில் சத்தான உணவு சாப்பிட்டார்கள். ஆனால் தற்பொழுது பாஸ்ட்புட் அதிகம் சாப்பிடுகிறார்கள் ஆட்டிசம் என்பது மரபணு குறைபாடுதான்.

தாய் கருவுற்றிருக்கும் போது மன அழுத்தத்தில் இருக்கக்கூடாது. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆட்டிசம் பாதித்த மாணவர்கள் உருவாக இதுவும் ஒரு காரணம் . ஆட்டிசம் பாதித்த மாணவர்களுக்காக அழகப்பா பல்கலைக்கழகத்தில் சிறப்பு பள்ளி உள்ளது. அங்கு எவ்வித கட்டணமும் இல்லாமல் பயிற்சி அளிக்கப்படுகிறது. பேச்சுப் பயிற்சி, பிசியோதெரபி உள்ளிட்ட பல வகையான பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனை நமக்குத் தெரிந்த அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.இவ்வாறு பேசினார்கள். நிகழ்வில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியை முத்து லெட்சுமி நன்றி கூறினார்.

வெள்ளபுத்தூர் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுமா?

விவசாயிகள் எதிர்பார்ப்பு

செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளபுத்தூர் ஊராட்சியில் 9 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த நெல் கொள்முதல் நிலையம் மீண்டும் திறக்கப்படுமா?என விவசாயிகள் எதிர் பார்ப்பு தெரிவிக்கின்ற

செங்கல்பட்டு மாவட் டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்டது வெள்ளபுத்தூர் ஊராட்சி உள்ளது. இந்த ஊராட்சி யில் பாலக்காடு, ஆண்டி

மேடு அம்பேத்கர்நகர், சுக் கன் கொள்ளை, கள்ளன் கொள்ளை, அருந்ததியர் பாளையம் உள்ளிட்ட

கிராமங்களிலும், இதே போன்று அருகில் உள்ள கரிக்கிலி ஊராட்சிக்கு உட்பட்ட கரிகிலி கொளத் தூர், சித்தாமூர் உள்ளிட்ட கிராமங்களிலும் தற்போது நவரை பட்டத்தில் நெல் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

நெல்லை கொள்முதல் செய்ய கடந்த 9 ஆண்டுகளாக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வெள்ளபுத்தூர் ஊராட் சியில் செயல்பட்டு வந் தது வழக்கம்போல இந்த வருடமும் நெல் கொள் முதல் நிலையம் இப்பகு தியில் திறக்கப்படும் என விவசாயிகள் காத்திருந்த னர் அரசு அதிகாரிகளும் இந்த ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என உறுதி அளித்திருந்தனர்.

இந்த ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. மேலும் வழக்கம் போல் விவசாயிகளிடமிருந்து அரசு நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் தற்போது விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொண்டு வந்து குவித்து வைத்திருக்கின்றனர். எனவே 9 ஆண்டுகளாக இப்பகுதியில் செயல் பட்டு விவசாயிகளின் நலன் காத்த அரசு நேரடி நெல் கொள்முதல் நிலை யத்தை உடனடியாக திறக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு தெரிவிக் கின்றனர். மேலும், நெல் கொள்முதல் நிலையம் திறக்காவிட்டார் எதிர்வ ரும் சட்டமன்ற தேர்தலை புறக்கனிப்போம், என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஓம் ஸ்ரீ மகாலட்சுமி தாயே நமக ஓம் ஸ்ரீ மகாலட்சுமி குருவே நமக

ஆதிமூல சற்குரு வீரபோக வசந்தராயர் கல்கி மகான் ஸ்ரீ மகாலட்சுமி சுவாமிகள்

கட்டிய மனைவியை சந்தேகப்படுபவனும், நல்ல நண்பனை சந்தேகப்படுபவனும்,நல்ல குருவை சந்தேகம் கொள்பவனுக்கு விளக்கம் தங்கமா, வெள்ளியா, இல்லை பித்தளையா, காப்பரா என்று சந்தேகப்படுவான். குரு பிரம்மா விஷ்ணு சிவாய நம.

அவனே உலகில் குரு. அவர் தான் கல்கி.

கலி முற்றிக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் சந்தேகம் பிறக்கும். யாரையும் திருப்தி கொள்ள வைக்க முடியாது.என்ன செய்வது.அதுதான் கொடிய கலி.

எவன் ஒருவன் பெண் துரோகம் செய்கின்றானோ காலத்தில் அழியாத பாவத்தை செய்து விட்டால் எந்த காலத்திலும் அவன் தப்பவே முடியாது. உயிர் போகாது.துடித்துக் கொண்டே கிடப்பார்.

ராம அவதாரம் அதற்கு சாட்சி. கல்கி அவதாரம் அதற்கு சாட்சி. ராம அவதாரம் ஏகபத்தினி விரதன். பெண் துரோகம் செய்ததில்லை. அதுபோலவே கல்கி அவதாரமும் ஏக பத்தினி விரதன்.பெண் துரோகம் செய்ய மாட்டார். பெண் துரோகம் செய்பவன் அனைத்தும் காலி உலகில். ஜாக்கிரதை. பணம் இருந்தால் போதும் கஞ்சா இருந்தால் போதும். இவர்கள் எல்லாம் மனிதர்களா? இயற்கை இறைவன் இடத்தில்இருந்துதப்பமுடியாது.பெண்துரோகத்திற்கு இலக்கணமாணவர்கள் பலி. பீஷ்மர், வாலி அவர்களுடைய நிலை என்ன. அவர்களையும் கருணைக் கண்ணால் காப்பாற்றினார் கண்ணனும் அவரே, ராமனும் அவரே, கல்கியும் அவரே. பெண் மானம் காப்பான் அவன் தான் கல்கி. பீஷ்மருக்கும், வாலிக்கும், சூர்ப்பனகைக்கும், அவர்களுக்கு கல்கி தான் விமோசனம் தருகிறார். கலிகாலத்தில் இப்பொழுது தருகிறார் விமோசனம்.

உலகத்தில் கொலைகாரன், மது, சூது,வஞ்சகம், பொறாமை, பொய், ஆணவம், திமிர் ஆகியவற்றை மன்னித்து விடுவார். பெண் துரோகம், நம்பிக்கை துரோகம் இரண்டையும் காலம் என்ற இறைவன் எப்பொழுதும் மன்னிக்க மாட்டான். பூனைக்கு ஒரு முடி விழுந்தால் மிகப் பெரிய பாவம் என்பார்கள். பெண் விடுகின்ற கண்ணீருக்கு காலந்தோறும் அழியாத பாவம். மனிதனும் பாவத்தை சம்பாதித்து விட்டான். அவர்களுக்கு கொடூரமான அழிவுகள் நடக்கப் போகின்றது. யாரும் தடுக்க முடியாது. எந்த கோயிலும் காப்பாத்தாது.எந்தப் பிரார்த்தனையும் வெல்லாது. இனி வருகின்ற காலத்தில் இந்த தவறை செய்யாதீர்கள். நிதியை தேடி ஓடாதீர்கள். நீதியை தேடுங்கள். தர்மம் வெல்லும். இறைவன் என்ற கல்கி இருக்கின்றான். நல்லவர்களை காப்பாற்றுவான். கணவனுக்கு மனைவி உண்மையா இருங்கள். மனைவிக்கு கணவன் உண்மையாய் இருங்கள். அதுவே நேர்மை வழியாகவும், ஒளியாகவும் ஜெயிக்கும் சத்தியம். " வாழ்க சத்தியம்" "ஜெயிப்பது நிச்சயம் " "வாழ்க தமிழ்"

திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கள்ளக்குறிச்சிதெற்குமாவட்டகழகசெயலாளர்ரிஷிவந்தியம்சட்டமன்றஉறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து முதலமைச்சரும் கழகத் தலைவருமான தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளைஎடுத்துரைத்தும்ரிஷிவந்தியம்தொகுதியில்நிறைவேற்றியுள்ளதிட்டங்கள் குறித்தும் மக்களிடையே எடுத்துரைத்து மேலும் பல நல்ல திட்டங்களை செயல்படுத்திட உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறசெய்யுமாறு கேட்டு பிரச்சாரம்செய்து வருகின்றார்உடன்கூட்டணிகட்சிநிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் அணியினர் என ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் பானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மதிப்பிற்குரிய சகோதரி வழக்கறிஞர் கு. மாலதி திருக்குமரன் அவர்கள் தோழர்களுடன் இணைந்து வீடு வீடாக சென்று மக்களிடையே பானை சின்னத்தை காட்டி வாக்களிக்கும் மாறு கேட்டு தீவிர வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு மதுரை திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கள்ளிக்குடி இருந்து தே.கல்லுப்பட்டி சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்த பறக்கும் படை அலுவலர்கள் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மதுரையில் அதிமுக கிழக்கு தொகுதி வேட்பாளர் மாங்குளம் மகேந்திரன் தொகுதி தலைமை தேர்தல் காரியாலயத்தை கழக அமைப்புச் செயலாளர் கிழக்கு மாவட்ட செயலாளர் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் ராஜன் செல்லப்பா அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து ஒத்தக்கடை அருகே தனியார் திருமண மகாலில் வேட்பாளர் அறிமுக கூட்டம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் அரசு, கார்த்திகேயன், ராஜேந்திரன், வக்கீல்ரமேஷ், முன்னாள் எம்எல்ஏ பொன்னம்பலம் , நிலையூர் முருகன், வாசு(எ) பெரியண்ணன் வண்டியூர் செந்தில்குமார், அவனியாபுரம் கர்ணா, பெரியசெல்வம்வீரபாண்டி ஊராட்சி மு.தலைவர்சேகர்உள்படமாவட்ட, ஒன்றிய, பகுதி கழக, கிளைக் கழக, நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (02.04.2026) அன்று மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் தொழிலாளர் துறையின் சார்பில், தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்நாளான்று(23.04.2026)அனைத்துநிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்குவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சி செயலர் தனம், ஈரோடு, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) கோ.ஜெயலட்சுமி. ஈரோடு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக துணை இயக்குநர் அமர்நாத், வணிகர் சங்க பிரதிநிதிகள், தொழிற்சாலை/ நிறுவன உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிமுக சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிமுகப்படுத்தினார்

கிருஷ்ணகிரி மாவட்டம் இந்த மாவட்டத்தில் 6 சட்டமன்ற உறுப்பினர்களை பெற்ற ஒரு மாவட்டம் இந்த மாவட்டத்தில் ஆஇ அதிமுக சார்பாக ஐந்து சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகின்றது இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தினர் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கே பி முனுசாமி அவர்களையும் ஓசூர் தொகுதியில் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி அவர்களையும் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் அசோக்குமார் மாவட்ட கழக செயலாளர் அவர்களையும் பர்கூர் தொகுதியில் கோவிந்தராஜ் அவர்களையும் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி (தனி) தமிழ் செல்வம் அவர்களையும் கிருஷ்ணகிரி பழைய பேட்டை மைதானத்தில் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தினார் இதில் கழகப் பொறுப்பாளர்கள் கழகத் தொண்டர்கள் என சுமார் 30000 பேர் பங்கேற்றனர் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் உரை ஆற்றும் போது தற்போது நடந்து வரும் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை விவசாயிகளின் விலைப்பொருள்களுக்கு தகுந்த ஊதியம் இல்லை மேலும் சட்டம் ஒழுங்கு சரியில்லை என எண்ணற்ற குறைகளை பொதுமக்களிடம் கூறி உரையாற்றினார் அதிமுக ஆட்சி வந்த உடன் தாங்கள் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தருவதாக பொதுமக்களிடையே உரையாற்றினார்.

அதிகமான மக்கள் விசில் சின்னத்திற்கே வாக்களிக்கத் தயாராக இருக்கின்றனர்; தவெக வேட்பாளர் சி.டி.நிர்மல் குமார் பேட்டி

தமிழ்நாட்டுக்கு பிரதமர் 10,15 ஆண்டுகளாக வருகிறார். அவர் சொல்லாத திருக்குறளை இல்லை எல்லா கவிதையும் பேசி விட்டார் ஏன் மக்கள் அவரை ஒரு சதவீதம் கூட ஏற்கவில்லை ஏனென்றால் அவரது எண்ணம் சரி இல்லை-மதுரைக்குஎத்தனையோ முறை வந்தவருக்கு திருப்பரங்குன்றம் தெரியவில்லையா?

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்களம்சூடுபிடித்திருக்கும்நிலையில்பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்த வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல்செய்து வருகின்றனர் இந்த நிலையில் தமிழகத்தில் அதிகம் கவனம் பெற்ற திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் தவெக சார்பில் அக்கட்சியின் இணை பொதுச் செயலாளர் சி டி நிர்மல் குமார் போட்டியிடுகிறார் இந்த நிலையில் அவர் திருப்பரங்குன்றம் அடுத்த திருநகரில் உள்ள தனது அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார் தொடர்ந்து அவர் கூறும் போது: தமிழக வெற்றிக் கழகத் தலைவரின் திருச்சி கிழக்குத் தொகுதி வேட்புமனுத் தாக்கல் இன்று மிகச் சிறப்பாகவும், எழுச்சியுடனும் நடைபெற்று முடிந்தது. திருச்சி முழுவதும் திரண்டிருந்த லட்சக்கணக்கான தொண்டர்கள் மற்றும் பொதுமக்களின் உற்சாகம்,தமிழகம் முழுவதும் ஒரு பெரிய மாற்றத்திற்கான அலை வீசுவதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. செல்லும் இடமெல்லாம் 80 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் 'விசில்' சின்னத்திற்கே வாக்களிக்கத் தயாராக இருப்பதாகவும், வரும் 23-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் இதனை எதிரொலிக்கும்.

தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் சென்னையில் தலைவரின் பிரச்சாரத்தின் போது காவல்துறை போதிய பாதுகாப்பு வழங்கவில்லை ஆனால் திருச்சியில் காவல்துறையின் செயல்பாடுகள் ஓரளவுக்குத் திருப்திகரமாக இருந்தது. அதேபோல் எல்லா மாவட்டங்களில் காவல்துறை சிறப்பாக ஒழுங்காக செயல்பட வேண்டும் என்பது எங்களின் வேண்டுகோள் மே 4க்கு பிறகு எங்கள் தலைவர் தான் முதல்வர்

அப்போது தவறு செய்த அனைத்து அதிகாரிகளும் தண்டிக்கப்படுவார்கள். பொதுமக்களுக்கு விதிமுறைகள் தெரியாது காவல்துறை தான் அதை கொண்டு வர வேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டப்பேரவைத் தொகுதியில் கடந்த 25 முதல் 30 ஆண்டுகளாக நான் பார்க்கிறேன் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை மக்கள் தங்களது உழைப்பால் மட்டுமே முன்னேறி வருகிறார்கள்.

எத்தனை முறைதமிழ்நாட்டுக்கு பிரதமர் 10,15 ஆண்டுகளாக வருகிறார். அவர் சொல்லாத திருக்குறளை இல்லை எல்லா கவிதையும் பேசி விட்டார் ஏன் மக்கள் அவரை ஒரு சதவீதம் கூட ஏற்றவில்லை ஏனென்றால் அவரது எண்ணம் சரி இல்லை மதுரைக்கு எத்தனை முறை வந்தவருக்கு திருப்பரங்குன்றம் தெரியவில்லையா திருப்பரங்குன்றத்தில் ஒரு எமோஷனல் கிரியேட் ஆகி உள்ளது அதனை எறிய விட்டு அரசியல் செய்ய தமிழக மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் அங்கப் பிரதட்சணம் செஞ்சாலும் மக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் சிறுபான்மையினார் ஓட்டுக்காக இது பெரிதாக்கியது திமுக அமைதியாக இருந்திருப்பர்ன்றத்தை சீர்குலைத்தது திமுகவும் பாஜகவும் தான் திருப்பரங்குன்றத்தில் எங்க பார்த்தாலும் போலீசு பேரிக்காடு உள்ளேபோனால்ஆதார் கார்டு கொடுத்து விட்டு போக வேண்டும் இதெல்லாம் வேண்டாம் இவர்கள் இரண்டு பேரும் அவர்கள் வேலையை பார்த்துவிட்டு போனால் நாடு அமைதியாக இருக்கும் என்றார்.

அச்சிறுப்பாக்கம் அருகே தின்னலூர் ஊராட்சியில் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர்க்கு சிறப்பான வரவேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அச்சிறுப்பாக்கம் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.அப்போது பொதுமக்களிடம் வேட்பாளர் அமுலு பொன்மலர் பேசுகை-

தெற்கு ஒன்றியத்தில் உள்ள தின்னலூர் ஊராட்சியில் ஒன்றிய கவுன்சிலர் பானுமதி ராஜசேகர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.அப்போது பொதுமக்களிடம் வேட்பாளர் அமுலு பொன்மலர் பேசுகையில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைந்தால் பெண்களுக்கு ரூ.2,000, இல்லத்தரசி என்ற புதிய திட்டத்தில் ரூ.8,000, வேலைவாய்ப்பு உள்ளிட்ட மகத்தான திட்டங்களை பெற முடியும்.ஆகவேமீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரும்வாரியான வாக்கு வித்தியாத்தில் வெற்றபெற செய்ய வேண்டும் என்று பேசினார்.

இதில் ஒன்றியகுழு பெருந்தலைவர் ஒரத்தி கே.கண்ணன் நிர்வாகிகள் பார்த்தசாரதி, வெங்கடேசன் உள்ளிட்ட திமுககட்சி நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பாபா மெட்ரிக் பள்ளியில் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விடைபெறுதல் நிகழ்ச்சி.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இயங்கி வரும் தனியார் பள்ளியான பாபா மெட்ரிக் பள்ளியில் 2025-26 கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு விடைபெறுதல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.இந்நிகழ்ச்சியைமுன்னிட்டுபள்ளியின் நிறுவனர் திருமதி இராஜேஸ்வரி அம்மா, தாளாளர் திரு ஆர்.கபிலன் மற்றும் பள்ளி நிர்வாகி திருமதி ஆர். மீனாட்சி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினர். நிகழ்ச்சியில் மாணவர்களுக்காக பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், பள்ளியின் முதல்வர் திருமதி எம். சாரதா அவர்கள் மாணவர்களுடன் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர். கடந்த 12 ஆண்டுகளாக தங்களது குழந்தைகளை பாபா மெட்ரிக் பள்ளியில் கல்வி கற்க வைத்த பெற்றோர்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறந்த மாணவர்களாக உருவாக்கியமைக்காக பள்ளி நிர்வாகத்திற்கு நன்றி செலுத்தியும், ஆசிரியர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்தியும் சென்றனர். மாணவர்களுக்கு மறக்க முடியாத நினைவாக இந்த விடைபெறுதல் நிகழ்ச்சி பாபாமெட்ரிக்பள்ளியில்மிகச்சிறப்பாகநடைபெற்றது.

திருப்பரங்குன்றம் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியை ஆதரித்து கனிமொழி எம்.பி. பிரச்சாரம்

கோவிட் நேரத்துல வரிசையில் தான் நின்றோம் பண மதிப்பிழப்பு வந்த பொழுது வரிசையில் நின்றோம் பெட்ரோல் டீசல் வாங்க இப்ப வரிசையில் சிலண்டலுக்காக வரிசையில் நிக்கிறோம் அதுமட்டுமில்லாமல் டெல்லியில் போய் எடப்பாடி பழனிசாமி என்ற தமிழகத்தின் தலைவரோ அங்கு இருக்கக்கூடிய தலைவர்களை பார்க்கிறதுக்கு வரிசையில் தான் நின்னுட்டு இருக்காரு

மதுரை திருப்பரங்குன்றம் தொகுதி வீரகனூர் பகுதியில் திமுக வேட்பாளர் S. கிருத்திகா தங்கப்பாண்டி ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பிரச்சாரம் செய்தார்

மாவட்ட செயலாளர் இந்த பகுதியில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடு செய்துள்ளார்

முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட கூடிய பெண் வேட்பாளர் மகளிர் அணி வேட்பாளர் அமைப்பாளர் கிருத்திகா தங்கபாண்டி

கூட்டணிக் கட்சிகளின் கொடி இந்த கூட்டத்தை பார்க்கும் பொழுது கிருத்திகா தங்கபாண்டியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது

இந்த பகுதி மக்களுடைய தேவைகளை கேட்டு அறிந்து உங்களுக்காக முதல் திறமை இருக்க கூடிய வேட்பாளர் தான் நம்முடைய முதலமைச்சர் வழங்கி இருக்கிறார்

தமிழகத்தின் தலை நிமிர்த்தக்கூடிய பெண் வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன்

எல்லாகூட்டம்சேர்ந்து தான் வெற்றி உருவாக்க போகிறீர்கள்

திருப்பரங்குன்றம் என்றால் சில காலத்திற்கு முன்னால் பிஜேபி அதிமுக எல்லாம் உருவாக்க நினைத்த கலவரத்தை நாம் மறக்க முடியாது காலம் காலமாக தமிழ்நாட்டில் ஒரே குடும்பமாக வாழக்கூடிய அனைத்து சமுதாய மக்கள் தமிழக மக்கள்

ஆனால் மதத்தின் பெயரால் கால் உண்ற முடியாது என்று எந்த காலத்தில் இல்லாமல் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டும் பாஜக தொடர்ந்து இந்த பகுதியில் மதக்கலவரங்களை உருவாக்கி ஆட்சியை உருவாக்கக் கூடியவர்கள் இந்த செயலை திருப்பரங்குன்றத்தில் செய்ய நினைத்தார்கள் ஆனால் திருப்பரங்கு ன்றம் மக்கள் சரியான பாடத்தை கற்பித்து இருக்கிறார் முத்து வேல் கருணாதிதியின் 5 ஆண்டு சாதனைகள் சாதனைகளை சொல்லி நாம் ஓட்டு கேட்கிறேன். மற்றவர்களைப் போல் எதுவும் செய்யாமல் ஓட்டு கேட்க வில்லை

ஒவ்வொரு மாதமும் 888 ரூ விடியல் பயணம் மகளிர்க்கான உரிமை தற்போது 1000 ரூபாயாக இருக்க கூடியது தொகை 2000 ரூ ஆக கிடைக்கும்.

புதுமை பெண் திட்டம் தமிழ் புதல்வன் திட்டம் மக்களுக்கு பலன் தரக்கூடிய திட்டங்கள் திமுக ஆட்சி 4000 க கோவில்களை குடமமுழக்கு செய்து உள்ளோம்

கோயில் நிலங்களை7000 ஏக்கர் மீட்க்கபட்டுபட்டுள்ளது திராவிட ஆட்சியில் செய்யப்பட்டுள்ளது எடப்பாடி பழனிச்சாமி கூறியது என்னை போய் சங்கி என்று கூறினீர்கள் நீங்களும் தான் பிஜேபியில் கூட்டணி வைத்து இருந்தீர்கள் கலைஞர் கூறியது இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களுக்கும் பாதிப்பு வராமால் கூட்டணி வைத்து இருந்தார் கலைஞர் அவர்கள் அதிவாணியிடம் கூட்டனி வைத்தார்

ஆனால் எடப்பாடி பழனிச்சாமி பிஜேபி என்ன சொல்கிறதோ எல்லாவற்றிற்கும் தலையாட்டுகிறீர்கள் ஆனால் அவர் சொல்வதற்கு முன்தாக தலையாட்டுகிறீர்கள் ஆனால் நீங்கள் முழு சங்கியாகவே மாறிவிட்டீர்கள்.

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக வீரப்பன் சத்திரம் பகுதி 23வது வட்ட பிரதிநிதி ரவிச்சந்திரன் மறைவுக்கு மேற்கு சட்டமன்ற திமுக வேட்பாளர் சு.முத்துசாமி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கொண்டு அவருடன் மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகிற 23ஆம் தேதி ஏப்ரல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்நிலையில் ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி 3.4.2026 அன்று தனது வேட்புமனுவை ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், வருவாய் கோட்டாட்சியருமான சிந்துஜாவிடம் வழங்கினர். இந்த கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியினை துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (03.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியினை துவக்கி வைத்தார்.

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்தாவது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது என (15.03.2026) அன்று அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என அனைத்து தரப்பு வாக்காளர்களுக்கும் தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்றைய தினம் பவானி புதிய பேருந்து நிலையத்தில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அனைத்து தரப்பு மக்களுக்கும் வாக்களிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் வீட்டிற்கே சென்று வாக்குப்பதிவை பதிவு செய்திடவும். மேலும் தேர்தல் நேரத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கவும், பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள், காவல் துறை சார்ந்த அலுவலர்கள் என அனைத்து பொதுமக்களும் வாக்களிக்கவும் இத்தகைய நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் அனைத்து ஏற்பாடு செய்துள்ளது. மேலும் வாக்காளர்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அச்சுறுத்தலின்றி வாக்களிப்பதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவித்தார். மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு சைக்கிள் விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார். இப்பேரணியில் 200-க்கும் மேற்பட்ட கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர். இப்பேரணியானது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, ஆசிரியர் குடியிருப்பு வழியாக சூரம்ப ட்டிவலசு தலைமை மருத்துவமனை ரவுண்டானா வழியாக மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது. மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் ஈரோடு மேலாண்மை பயிற்சி நிலைய மாணவ மாணவிகள் விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர்கள் ப. கந்தராஜா, த.செல்வக்குமரன், துணை பதிவாளர்கள் இரா.முத்து சிதம்பரம், சு.மாதேஷ், பெ.பிரகாஷ், பயிற்சி துணை பதிவாளர் மைதிலி மாவட்ட ஊராட்சி செயலர் தனம், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற

பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு 10,008 தீர்த்தக்கூட ஊர்வலமாக எடுத்துச் செல்லும் நிகழ்வு

ஈரோடு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாமுன்னிட்டு ஈரோடு ஸ்ரீ பெரிய மாரியம்மன் கோவில் நிலமீட்பு இயக்கம் சார்பாக அன்று 02/04/2026 மாலை ஈஸ்வரன் கோவிலில் இருந்து புறப்பட்டு பெரிய மாரியம்மன் கோவிலுக்கு 10,008 தீர்த்த கூட ஊர்வலமாக எடுத்துச் செல்லும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் ஸ்ரீ பெரிய மாரியம்மன் கோவில் நிலமீட்பு இயக்கத் தலைவர் ERM சந்திரசேகர், செயல் தலைவர் கைலாசபதி, துணைத் தலைவர்கள் ERK ராஜேஸ்வரன், தங்கவேல், சிவசுப்ரமணியம், பொருளாளர் ராஜ கண்ணன், பொதுச் செயலாளர்கள் A.J. சரவணன், சிவா (எ) பரமசிவம், சட்டக்குழு உறுப்பினர்களான வழக்கறிஞர்கள் பழனிசாமி, ஈஸ்வரமூர்த்தி, தேவிபிரசாத், சாமிநாதன் மற்றும் சமுதாயத் தலைவர்கள், வர்த்தகர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்களும், பெரும் திரளான அளவில் பெண்களும் 10,008 தீர்த்தக்குடம் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இந்து முன்னணி மாவட்ட தலைவர் ப. ஜெகதீசன், அனைத்து வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் ராஜமாணிக்கம், அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் ரவிச்சந்திரன், திருவேங்கடசாமி வீதி சங்க முன்னாள் தலைவர் செந்தில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் C.K. சரஸ்வதி, விஸ்வகர்மா சங்க பொறுப்பாளர்கள், கலந்து கொண்டனர்.

மானாமதுரை நகர் கழகச் செயலாளர் பொன்னுசாமியின் 65 ஆவது பிறந்தநாள் விழா

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை திராவிட முன்னேற்ற கழகத்தின் நகரக் கழகச் செயலாளர் பொன்னுசாமி அவர்களின் 65வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் மானாமதுரை சட்டமன்ற தொகுதியை சேர்ந்த திமுக மற்றும் வெவ்வேறு கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், பிரமுகர்கள், அனைத்து சார்பு அணியினர், நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பொன்னுசாமி அவர்களை அவரது வீட்டில் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தியும், நினைவு பரிசுகள் வழங்கியும், புகைப்படங்கள் எடுத்துக்கொண்டு, தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் பொன்னுசாமி அவர்கள்

சுமார் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திமுக கட்சியிலும், சுமார் 35 வருடங்களுக்கு மேலாக நகர கழக செயலாளராக பொது சேவையில் ஈடுபட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Trump imposes 100% tariffs on patented pharma imports. Will move impact India?

A year after he imposed reciprocal trade tariffs on countries, a move since overruled by the US Supreme Court, President Donald Trump has now levied new tariffs on patented pharmaceutical imports. primarily aims to pressure pharma companies to manufacture more in the United States of America. It was taken citing national security and supply chain risks

following a probe. However, generic medicines are currently exempt from the tariffs; officials have cautioned that this could change if the generics industry does not move production to the US. For India, the exemption of generic drugs, as clarified in the proclamation, proves crucial. Indian firms dominate global markets in the generic drugs sector. Therefore, in the short term, the exclusion of generics offers a buffer, and facilitates the exports of low-cost medicines, which form the backbone of India's pharmaceutical trade with the US,

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக ஆய்வு கூட்டம்

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக ஆய்வு கூட்டம் இக்கூட்டத்தில் வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் எரிவாயு உருளைகள் தற்போதுள்ள வாறு வழக்கமான நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என எண்ணெய் நிறுவன அலுவலர்கள் உறுதியளித்துள்ளனர். எனவே, எரிவாயு உருளை விநியோக முகவர்கள் வழக்கமான நாட்கள் இடைவெளியில் முதுநிலைப்படி வீட்டு உபயோகத்திற்கானஎரிவாயுஉருளைகள்விநியோகித்து வருவதால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என தெரிவிக்கப்பட்டது. தற்போது வணிக LPG ஒதுக்கீடு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 70% வரை பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மற்றும் பெருந்துறை வட்டங்களில் உள்ள வணிகமற்றும்தொழில்துறைநிறுவனங்கள் குழாய்வழி இயற்கைஎரிவாயு(PNG) இணைப்பு பெற BPCL விநியோக நிறுவனங்களில் பதிவு செய்வதன் மூலம் 70% ஒதுக்கீட்டினை பெற இயலும்.

இதர வட்டங்களில் உள்ள வணிக மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் குழாய்வழி இயற்கை எரிவாயு (PNG) இணைப்பு பெற IOCL, BPCL மற்றும் HPCL விநியோக நிறுவனங்களில் பதிவு செய்வதன் மூலம் 70 % ஒதுக்கீட்டினை பெற இயலும்.எனவேLPG நுகர்வோர் குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்புகளுக்கு பொருந்தும் வகையில் நகர எரிவாயு விநியோக நிறுவனமான BPCL எண்ணெய் வணிக நிறுவனத்தில் பதிவு செய்து 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெறுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு ஈரோடு பி.பி.சி.எல்(BPCL) குறைகளுக்கு பி.பி.சி.எல்(BPCL) நிறுவனத்தின் தொலைபேசி 6.9790132679 மற்றும்மின்னஞ்சல் முகவரி harshinisendhil@bharatpetroleum.in தொடர்பு கொண்டும், இதர மாவட்ட குறைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 0424-2252052 தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டும் பயன்பெறலாம் எனவும்ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.